# இலாபகரமான அடிமை வியாபாரம்




42

கி.பி. 1716-ல் டொன் அந்தோனி குலசேகரம், டொன் பிலிப்பு கந்தப்பு மயிலாத்தை, டொன் கஸ்பார் சேந்தையினார் வாரி, கந்தப்பர், சிலம்பயினர் என்னும் நால்வரும் ஒல்லாந்தரால் வன்னியராக நியமிக்கப்பட்டிருந்தனர்.

கி.பி 1765-ல் பனங்காமத்து வன்னியன் ஆகிய நிச்செய சேனாதிர்ராயன் இறக்க அவன் மகளாகிய மரியா கதிரி நாச்சியார் பராயமற்ற பிள்ளையாக இருந்ததால் இலகுநாத நல்ல நாச்சியார் அவளுக்கு பராமரிப்புக்காரியாக நியமிக்கப்பட்டார்.

மேற்பற்று வன்னிச்சி இல-ங்கை நாராயணன் என்னும் மடப்பள்ளியை மணந்து பெற்ற பிள்ளைக்கு வன்னியப் பதவி உரித்தில்லை என கி.பி 1765-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி ஒல்லாந்தர்கள் தீர்ப்புக் கூறியதால் அப்போது கருநாவல் பற்றுக்கு வன்னியனாக இருந்த புவிநல்ல மாப்பாணனே மேற் பற்றுக்கும் வன்னியனானான்.

புவிநல்ல மாப்பாணன் சிறந்த வீரனாகவும், ஒல்லாந்தருக்கு கீழ்படியாதவனாகவும் இருந்தான். கி.பி 1766 இல் அவனிடமிருந்து 23 யானைகள் ஒல்லாந்துக் கம்பனிக்கு போக வேண்டியவையாக இருந்தன.

அக் காலத்தில் நல்லை நாச்சி, சிதம்பர நாச்சி என்ற இரு வன்னிச்சிகளும் ஒல்லாந்தருடன் ஒத்துழைக்க மறுத்துக் கலகம் செய்தனர். இதனால் ஒல்லாந்தர்கள் வன்னியை தாங்களே பொறுப்பெடுத்து ஆளவேண்டும் என்று ஆலோசித்து கப்பித்தன் நாகல் (Capitain Nagel) என்பவனை வன்னிக்கு அதிகாரியாக நியமித்தனர்.

ஆரம்பத்தில் மன்னார் நிருவாக பிரிவைச் சேர்ந்த மாதோ-ட்டம், நானாட்டான், முசலி ஆகிய ஊர்கள் வன்னியர்களின் ஆட்சியின் கீழ் இருந்தன.

கி.பி 1692-ல் அப் பகுதி மக்களின் விருப்பப்படி அவை வன்னியர் ஆட்சியிலிருந்து பிரிக்கப்பட்டு பூநகரி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. அந்தப் பற்றில் உள்ள மக்கள் வருடந்தோறும் இரண்டு யானைகள் திறையாக கொடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அரசாங்க உத்தியோகத்தர்களும், குருமாரும், பிரயாணம் செய்யும் வேளைகளில் அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை மக்களே கொடுக்க வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டிருந்தது. இது மக்களுக்கு பெரும் தொல்லையினைக் கொடுத்தது.

உத்தியோகத்தர்கள் உணவுக்காக என்று சொல்லிக்கொண்டு தங்களுக்கு தேவைக்கு அதிகமான பொருட்களை வழங்கும்படி நிர்ப்பந்தம் செய்து வந்தனர். பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லாத தங்களது நண்பர்கள், உறவினர்களுக்குக்கூட உணவுப் பொருட்களை வழங்கும் படி அவர்கள் மக்களைப் பணித்தார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கும், மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் பிரயாணம் செய்துவந்த அரசாங்க அதிகாரிகளுக்கு உணவளித்து வந்ததால் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வந்த இலுப்பக்கடவை, பல்லவராயன்கட்டு மக்கள் அப்போது யாழ்ப்பாணக் கொம்மாந்தோராக இருந்த பயில் என்பவருக்கு முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து தனது கைஒப்பம் இடப்பட்ட சீட்டை பெற்றவர்களுக்கு மாத்திரமே மக்கள் உணவு வழங்க வேண்டும் என்றும், அவ் உணவுக்கான பணத்தை அரசாங்கமே வழங்கும் என்றும் அவன் அறிவித்தான்.

அக் காலத்தில் அடிமை வியாபாரம் ஒரு முக்கிய வியாபாரமாக யாழ்ப்பாணத்தில் இருந்தது. உயர் சாதியினரும், பணமிருந்த செல்வந்தர்களும் சாதியில் குறைந்த கீழ் நிலையில் இருந்தவர்களை வாங்கி விற்கும் வியாபாரத்தில் ஈடுபட்டனர். ஒரு அடிமை, ஒரு பிடி அரிசியின் விலையை விடக் குறைவாக இருந்ததாக கம்மந்தோர் ஜுவடக்குரோன் தனது அறிக்கையில் எழுதி வைத்துள்ளார்.

தமிழ் நாட்டில் இருந்தும் கூட அடிமைகள் இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்பட்டதாக அவரது அக் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது. தமிழகத்து நெல்லின் விலையிலும் பார்க்க அடிமைகளின் விலை குறைவாக இருந்ததால் அடிமை வியாபாரம் அக்காலத்தில் லாபம் தரும் ஒரு தொழிலாக இருந்தது.

கி.பி 1695-ல் தமிழ் நாட்டிலிருந்து 3589 அடிமைகள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவந்து விற்கப்பட்டதாக தெரிய வருகின்றது. இவர்களில் அநேகர் வன்னியிலும், கண்டியிலுமே விற்கப்பட்டனர். இந்த அடிமைகளை விற்கக் கொண்டு போகும் போது மிருகங்களை கால்களை பிணைத்துகொண்டு போவதைப் போலவே இவர்களும் கை, கால்கள் பிணைத்து கொண்டு செல்லப்பட்டனர். அடிமைகள் கிறிஸ்தவர்களாக இருந்தால் அவர்களை அவ்வாறு பிணைக்கக்கூடாது என்ற உத்தரவு இருந்தது.

ஒரு அடிமை தான் கிறிஸ்தவனாக மாறப் போவதாக அறிவித்தாலும், அவனுக்கு சலுகைகள் வழங்கும் வழக்கம் முதலில் இருந்தது. ஆனால் பல அடிமைகள் இவ்வாறு மதம் மாறி சலுகைகளைப் பெற ஆரம்பித்ததும் அடிமைகளை வாங்குவோர் ஒல்லாந்து தேசாதிபதியிடம் முறைப்பாடு செய்தனர். இதனால் அடிமைகள் எவரும் கிறிஸ்தவர்களாக மதம் மாற முடியாது என உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. அடிமைகள் பணம் கொடுத்து தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ள முடியாது. ஆனால் அரசாங்கத்தால் அடிமைகளாக வாங்கப் பட்டவர்களுக்கு அந்தச் சலுகை இருந்தது.

அடிமைகளை வைத்திருக்கும் ஊரவர்கள் தொடர்ந்து அவர்களை வைத்துப் பராமரிக்க முடியாத பட்சத்தில் இன்னொருவருக்கு அவர்களை விற்பதானால் அத்தகைய அடிமைகளை வாங்குபவர்கள் விலை மீட்சிப் பத்திரமும், அரசாங்க உத்தரவுப் பத்திரமும் பெற வேண்டும். இந்த அடிமை வியாபாரத்திற்கு என்றே ஒரு ஒழுக்கக் கோவைச் சட்டம் ஒல்லாந்தர்களால் இயற்றப்பட்டிருந்தது.

ஊர்ப் பிரமுகர்கள், தலைமைக்காரர்கள் எல்லோரும் வருடம் இருமுறை தங்கள் பிரிவுக் கமாந்தோரை சென்று சந்திக்க வேண்டும் என்ற கட்டளையிடப் பட்டிருந்தது. அவ்வாறு அவர்கள் அவரைச் சந்திக்கச் செல்லும் பொழுது வெகுமதிகள் கொண்டு செல்ல வேண்டும் என்று ஒரு வழக்கம் உருவாக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு சாதியினரும் கமாண்டரைச் சந்திக்கும் போது என்ன வெகுமதி கொண்டு போக வேண்டும் என்றொரு பட்டியலே போடப்பட்டிருந்தது.

நெல்லு மூடை, மாடு, ஆடு, மான், கோழி, தேன் குடுவைகள் என்று இந்தப் பட்டியல் மிக நீண்டதாக இருந்தது. போத்துக்கேயர்கள் டொன் பட்டத்தை விற்றதைப் போல ஒல்லாந்தர்கள் யாழ்ப்பாண மக்களின் சாதிப் பற்றை உணர்ந்து 'வெள்', 'மடப்பம்' என்கின்ற பட்டங்களை விலைக்கு விற்று வந்தனர். தொடக்கத்தில் 100 இறைசாலாக விற்கப்பட்டு வந்த இந்தப் பட்டம் நாளடைவில் 25 இறைசாலாகக் குறைக்கப் பட்டது.

ஒரு அடிமை, ஒரு பிடி அரிசியின் விலையை விடக் குறைவாக இருந்ததாக கம்மந்தோர் ஜுவடக்குரோன் தனது அறிக்கையில் எழுதி வைத்துள்ளார். தமிழ் நாட்டில் இருந்தும் கூட அடிமைகள் இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்பட்டதாக அவரது அக் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது. தமிழகத்து நெல்லின் விலையிலும் பார்க்க அடிமைகளின் விலை குறைவாக இருந்ததால் அடிமை வியாபாரம் அக் காலத்தில் லாபம் தரும் ஒரு தொழிலாக இருந்தது.

- நக்கீரன்